விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வைப்பு



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 253 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 13 வெள்ளிக்கிழமை (29.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### செம்மணி மனிதப் புதைகுழியில்
## 8 மனித எச்சங்கள் நேற்று அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் மேலும் 8 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதை குழியின் 2ஆம் கட்ட அகழ்வின் 36ஆவது நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது புதிதாக 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

தனியார் பஸ்களுடன் கூட்டு நேர அட்டவணையில் பஸ்களை இயக்கும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பல தொழிற்சங்கங்கள் நேற்று அதிகாலை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அதற்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் அனைத்து தரப்பினரின் கருத்துக்களின் அடிப்படையிலேயே கூட்டு நேர அட்டவணை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர்

02ஆம் பக்கம் பார்க்க

### இலங்கையில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய
# 6 பாதாள உலகக் குழுவினர் இந்தோனேசியாவில் கைது
### நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

(ஜகர்த்தா)

இலங்கையில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 6 பாதாள உலகக் குழுவினர் நேற்று இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)



### புதுக்குடியிருப்பு மூங்கிலாற்றில்
## தனிமையில் வசித்த பெண் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு மூங்கிலாறுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பெண்ணொருவரின் சடலம் 15ஆம் பக்கம் பார்க்க

### பட்டதாரிகளுக்கான
## ஆசிரியர் போட்டி பரீட்சை விரைவில்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சை விரைவில் நடைபெறும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டுச் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் 15ஆம் பக்கம் பார்க்க

## உண்மையைத் தேடும் உறவுகளுக்கு எதிராகத் தொடர்ந்து ஒடுக்குமுறைகள்
### ஐக்கிய நாடுகள் சபை விசனம்

(நியூயோர்க்)

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்து கொள்வதை இலக்காகக் கொண்டு இயங்கிவரும் உறவுகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நடவடிக்கைக்குழு விசனம் வெளியிட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி
### தமிழர் தாயகத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழிக்கு சர்வதேச விசாரணை கோரி வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

15ஆம் பக்கம் பார்க்க

## பாதாளக் குழுவினர் அரசியல்வாதிகளுடன் தொடர்பு
### விரைவில் வெளிப்படுத்தப்படும் – அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

அரசியல்வாதிகள் பாதாளக் குழுவினருடன் தொடர்பில் காணப்படுகின்றனர். இது தொடர்பில் விரைவில் வெளிப்படுத்தப்படும்

15ஆம் பக்கம் பார்க்க

## 126 ஜோடிகளுக்கு சந்நிதியில் திருமணம்

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நேற்று 126 ஜோடிகளுக்கு திருமணம் நடைபெற்றது.

சிங்கப்பூரை வதிவிடமாகக் கொண்ட துரை தம்பதியினரின் நிதியுதவியில், 111 ஜோடிகளுக்கு திருமணம் செய்து 15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வது அகவைத்திரு நாள் வாழ்த்துக்கள்...

"மணி விழா நாயகி"
ஆசிரியை
திருமதி- துரைராணி ஈஸ்வரன்
30/08/2025



இலங்கா....புரி யெனுமீழ
இரத்தின துவீபம் தனில்
செந்நெல் விளை... நலம்
செந்தளிர்க் கிளிநொச்சி

நல்லெழில் நாதன் நாயகர்
நந்தவனப் பிள்ளை யாரவர்
வளரிளம் வான்பயிர் நிலம்
வயலூர் முருகனுயர் புலம்

தாயினுந் நற்தயை யுரையர்
தந்தை யார்ஜயாத் துரையர்
புவனேஸ்வரியது மூத்தமகள்
புவனம்மீதில்புகழ் பூத்தமகள்

பரமசிவம் இணைய செல்வமலர்
பந்ததில் மகனாம் ஈஸ்வரனை
மணாளனாய் ம(ண)னமது ஏற்று
மகவுகள் ஜதுசன் தமிழ்ப்பிரியன்

ஆற்றலாய் அறிவொளி மேவி
ஆசிரியப் பணியதனை தாவி
ஆரம்பக்கல்வி அன்பதை தூவி
ஆளுமைப்பலம் அருளும் தேவி

கற்பித்தல் உந்தன் மூச்சு
காட்டுவீர் ஊக்க.... வீச்சு
செய்யுந் தொழில் பேச்சு
சீருடன் சிறப்பும் ஆச்சு

தாராள மனப் பான்மை
தந்தாளும் தாளாண்மை
யாவிலும் நின் பக்குவம்
யாராலும் முடியாதம்மா!

பயன்கள் பதினாறும்
பாருலகில் பெற்றுயர
அகமகிழ்ந் தேற்றும்
அன்புடன் வாழ்த்தும்....

அன்புடன் வாழ்த்தும்.....
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
கிளி/பிரமந்தனாறு ம.வி

(5168)


# கொக்கிளாய் கடலில் மீன்பிடிக்க சென்ற இளைஞன் மாயம்

கொக்கிளாய் கடலிற்கு மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் மாயமாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்குளாய் கடலிற்கு நேற்று முன்தினம் (27) இரவு கடற்தொழிலுக்கு சென்ற இளைஞன் நேற்று வரை கரைக்கு திரும்பாமையால் அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் கொக்குளாய் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் இருந்து கடற்தொழிலினை மேற்கொண்டுவரும் வர்ணகுலசூரிய நெகித் ரவிஷ பிரனாந்து என்னும் 23 வயது இளைஞனே மாயமாகியுள்ளார்.

குறித்த இளைஞன் மீன்பிடிக்கச் சென்ற படகு நடுக்கடலில் நங்கூரமிட்டபடி நேற்று காலை கடற் தொழிலுக்கு சென்ற மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மீனவர் குறித்து எந்த தகவலும் தெரிய வரவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட படகுகளில் தேடியும் கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 25.07.2025 அன்றைய தினமும் கொக்குளாய் கடற்பகுதியில் மீன்பிடிக்க சென்ற இளைஞன் மாயமாகிய சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## இலங்கை...


பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார். இதேவேளை இணைந்த நேர அட்டவணை மூலம் அரசு, இலங்கை போக்குவரத்துச் சபையைக் கலைக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தொழிற்சங்க அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொழிற்சங்கங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டிருப்பதால் வேலைநிறுத்தம் நியாயமற்றது என்றும் அரசை சிரமப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அனைத்து போக்குவரத்துச் சபை சாரதிகளையும் கடமைக்குச் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு செய்யத் தவறி, தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்பவர்களை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

இன்றைய தினமும் இ.போ.ச தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இச் செய்தி, அச்சுக்குப் போகும் வரை அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (ம-7)


# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வடிவேலு
பரராசசிங்கம்

சத்தியம் தவறாச் சிந்தனை நெறியை
நித்தியம் எம்மில் நிலைத்திட வைத்து
வித்துவம் தனையே வாழ்வென உரைத்து
தத்துவம் ஆன தனிப்பெரும் கருணையே

சத்தமும் ஒலிக்காச் சாத்வீக நெறியில்
அத்தனை அன்பு அருளும் இறையாய்
முத்தென இருந்து மிளிரும் வாழ்வை
வைத்தனை நாமும் வளமது பெறவே

தென்னை போலே தலையால்ச் சுரந்து
இன்னும் வற்றா தினித்திடும் வண்ணம்
அன்னை வடிவில் அருகிருந்து அருளும்
உன்னைத் தினமும் உணர்ந்தோம் நாமே

அப்பா எங்கள் ஆனந்த இராகம்
தப்பா தொலிக்கும் தத்துவ சாரம்
முப்பால்க் குறளாய் முற்றும் தந்து
இப்பார் போற்றிட வைத்த வரமே

விளிக்கும் பொழுதினில் விநாயக நாமமும்
ஒலிக்கும் மணியின் ஒண்பொருள் வேதமும்
சிலிர்க்கும் வண்ணம் சிந்தை தனிலே
களிக்கும் எந்தையைக் காப்பான் அவனே

நீண்டொரு திசையில் நிந்தன் உறவுகள்
பூண்டிடும் புகழினைப் பொன்னாய் ஈந்தாய்
ஆண்டுகள் நான்கும் ஆயின எனினும்
நீண்டுதான் போகும் நிந்தன் நினைவே

மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரர்

(C-3758)



# உத்தர கிரிஜை அழைப்பு



கடந்த 13.08.2025 புதன்கிழமை இறையடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் பெருமாள் (பத்தர்) செல்லம்மா

அவர்களின் உத்தர கிரிஜைகள் நேற்று 28.08.2025 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக் கிரிஜைகள் 29.08.2025 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(5172)

இல.114/1. சிவப்பிரகாசம் வீதி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 373 7667


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா நேற்று வியாழக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் :- சிவசாந்தன்)

# பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழ்வோருக்கு 25,000 ரூபா வரை அபராதம்!

## அரசாங்கம் அதிரடித் தீர்மானம்

**(கொழும்பு)**

**பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.அந்த வகையில் வெற்றிலை எச்சிலை பொது இடங்களில் உமிழ்பவர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் ரூ. 3,000 ஆகவும் அதிகபட்சமாக ரூ. 25,000 ஆகவும் அபராதமாக விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக பேருந்து தரிப்பிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழப்படுகின்றமை தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட உரிய அரச நிறுவனாங்களுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே, அரசாங்கம் மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில், பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. (நி)



## கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க போர்க்கப்பல்



(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் USS டுல்சா போர் கப்பல், நேற்று முன்தினம் கொழு ம்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

வேகம் மற்றும் பல் துறைத் திறனுக்காக உருவாக்கப்பட்ட இந்தக் கப்பல், ஆழமற்ற நீர் மற்றும் திறந்த கடல் இரண்டிலும் இயங்கும் திறன் கொண்டது.

இந்த கப்பலின் விஜயம் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையையும், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பகுதிக்கான அவர்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகிறது என அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

## பாதாள உலகக் குழுவை சேர்ந்த இலங்கையர்கள் இந்தோனேசியாவில் கைது

(கொழும்பு)

கெஹல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சாலிந்தா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய குற்றக் கும்பலைச் சேர்ந்த 6 பேர் இந்தோனேசியப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இன்டர்போல் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போது இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் பாணந்துறை நிலங்க, பேக்கோ சமன் மற்றும் அவரது மனைவி மற்றும் மற்றொரு நபரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் திட்டங்கள் மற்றும் சர்வதேச தொடர்புகள் குறித்து மேலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## விமான ஓடு பாதையில் பட்டங்களைப் பறக்கவிடத் தடை

(கொழும்பு)

விமான ஓடுபாதைகளில் பட்டங்கள் பறக்க விடுவதற்கு விமானப்படையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பட்டங்கள் பறக்க விடப்படும் போது ஏற்படும் விமான விபத்துகள் குறித்து விமானப்படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

விமான ஓடுபாதைகளுக்கு அருகில் பட்டம் பறக்கவிடப்படுவது மிகவும் ஆபத்தான விடயமாகும். விமான ஓடு பாதைகளுக்கு அருகில் பட்டங்கள் பறக்கவிடுவது உலகெங்கிலும் உள்ள விமான விபத்துகளுக்கு ஒரு பிரதான காரணமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது விமானம் பறப்பதற்கு நேரடித் தடையாக இருக்கும்.

கட்டுநாயக்க, இரத்மலானை, ஹிங்குராக்கொட, சீன விரிகுடா, பலாலி, கட்டுகுருந்த, கொக்கல, வவுனியா, வீரவில மற்றும் மத்தள போன்ற பகுதிகளிலும் பட்டம் பறக்கவிடுவது மிகவும் ஆபத்தானது.

இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## சீதை அம்மன் ஆலயத்திற்கு சென்றார் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக் வியாழக்கிழமை காலை நுவரெலியாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சீதா எலிய ஸ்ரீ சீதை அம்மன் கோவிலுக்குச் சென்று சிறப்பு பூஜை செய்து ஆசி பெற்றார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்ச்சியான உறவுகள் மூலம் மலையக மலைப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து விசாரிக்கவும், நுவரெலியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து கருத்துக்களைப் பெறவும் நுவரெலியா மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்தபோது, அவர் ஆசீர்வாதம் பெற நுவரெலியா சீதை அம்மன் கோவிலுக்கும் சென்றார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வே தொடருக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

சிம்பாப்வே சுற்றுப்பயணத்துக்கான இலங்கை கிரிக்கட் அணியின் இருபதுக்கு இருபது ஓவர் தொடருக்கான குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்திற்காக சரித் அசலங்க தலைமையிலான 17 பேர் கொண்ட குழாம் பெயரிடப்பட்டுள்ளது. குறித்த அணியில் அறிமுக வீரர்களான விஷேன் ஹெலம்பகே மற்றும் கமில் மிஷார ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

மேலும் பெத்தும் நிஸ்ஸங்க, குசல் ஜனித் பெரேரா, குசல் மெண் டிஸ், கமிந்து மெண்டிஸ், தசுன் ஷானக, நுவனிது பெர்னாண்டோ, சாமிக்க கருணாரத்ன, துனித் வெல் லாலகே, மஹிஷ் தீக்ஷன, துஷான் ஹேமந்த, துஷ்மந்த சமீர, பினுர பெர்னாண்டோ, நுவான் துஷார மற்றும் மதீஷா பத்திரதான ஆகியோ ரும் அணியில் அடங்கியுள்ளனர்.

இலங்கை அணியின் சிம்பாப்வே சுற்றுப்பயணம் இன்று முதல் ஒரு நாள் போட்டியுடன் ஆரம்பமாக வுள்ள நிலையில் T-20 தொடர் செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம் பமாகவுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட சிம்பாப்வே அணியை சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



நிப்போன் கராட்டி சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் இருந்து 2025 ஆம் ஆண்டு வரைக்கும் இடம்பெற்ற கராத்தே போட்டியில் பதக்கங்களைப் பெற்று சிறப்பாக செயற்பட்ட கராத்தே வீர வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா பிரமண்டு வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் வியாவில் சைவ வித்தியாலயம் சாதனை



வடக்கு மாகாண விளையாட்டில் தனிப் பாடசாலைகளின் பெறுபேறுக்கு அமைய தீவககல்வி வலயத்திற்குட் பட்ட காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம் 2 தங்கம், 3 வெண்கலப்பதக்கங்களைப் பெற்று 40 புள்ளிகளுடன் வடக்கின் முதன் நிலை பாடசாலையாக சாதனை படைத்துள்ளது.

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம் சார்பில் பங்குபற்றிய மாணவர்களில் 12 வயது பெண்கள் பிரிவினருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் தயாகரன் கபிசனா தங்கப்பதக்கத்தையும் பாஸ்கரன் யதுசனா வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

4X50மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பாஸ்கரன் யதுசனா, தயாகரன் கபிசனா, லிங்கேஸ்வரன் ரதுஷா, வரதராசா வைஷ்ணவி, குகனேஸ்வரன் கபிசனா ஆகியோர் பங்குபற்றி தங்கப்பதக் கத்தையும் கைப்பற்றியதோடு 00.30.4 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனையையும் படைத்துள்ளனர்.

அத்துடன் நீளம்பாய்தல் மற்றும் 60 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி பாஸ்கரன் யதுசனா வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் (31.08.2025)

"வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இற்கமைவாக எமது சங்கத்தில் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் 31.08.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிளைகளுக்கு குறிப்பிடப்பட்ட தவிசாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடைபெறும். இவ் அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்கள் உரிய நேரத்தில் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கிளைப்பொதுச் சபை கூட்டங்கள் தொடர்பான விபரம் (31.08.2025 - முற்பகல் 10.00மணி)**

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | அச்செழு | திரு.க.சுரேஸ்பாபா | யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு |
| 02. | அச்செழு வடக்கு | திருமதி.த.சிவகுமாரி | யா/அச்செழு M.M.T.M பாடசாலை, அச்செழு |
| 03. | நீர்வேலி வடக்கு | திரு.அ.ஜேம்ஸன் | நீர்வேலி கிளை இல.03 |
| 04. | நீர்வேலி விக்னேஸ்வரா | திருமதி.பு.தர்சினி | யா/R.C தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு |
| 05. | நீர்வேலி மத்தி | திரு.சு.அகிலன் | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம் |
| 06. | நீர்வேலி சந்தி | திருமதி.சி.எமெல்டா | வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை சங்கம், நீர்வேலி |
| 07. | நீர்வேலி இராசவீதி | திரு.சி.சியாந்தன் | யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் |
| 08. | நீர்வேலி கரந்தன் | திரு.பா.பாலவரதன் | கரந்தன் சிவசங்கர பணடிதர் சனசமூகநிலையம் |
| 09. | நீர்வேலி கோவிலடி | திருமதி.சு.கஸ்தூரி | ஶ்ரீமுருகன் ஐ.நா.சங்கம், நீர்வேலி கந்தசாமி கோவிலடி |
| 10. | நீர்வேலிபூதர்மடம் | திருமதி.சு.ரூத்சாளினி | ஶ்ரீமுருகன் ஐ.நா.சங்கம், நீர்வேலி கந்தசாமி கோவிலடி |
| 11. | நீர்வேலி கரந்தன் | திரு.ம.கபிலன் | யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், |
| 12. | கோப்பாய் சந்தி | திருமதி.செ.சாதனா | யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் |
| 13. | கோப்பாய் விநாயகர் | திருமதி.ஜெ.ஜேயாமேரிகொன்சி | யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் |
| 14. | கோப்பாய் கண்ணகை | திரு.வீ.இரத்தினகாந்தன் | யா/றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோவிலடி, கோப்பாய் |
| 15. | கோப்பாய் அம்பாள் | திரு.த.கண்ணதாசன | யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் |
| 16. | கோப்பாய் இராசவீதி | திரு.செ.பகிரதன் | கோப்பாய் காளிகோவிலடி சனசமூக நிலையம் |
| 17. | கோப்பாய் மத்தி | திரு.பா.பாலரவி | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய் மத்தி |
| 18. | கோப்பாய் பழைய வீதி | திரு.இ.தனுசன் | கோப்பாய் பழைய வீதி கிளை இல.18 |
| 19. | கோப்பாய் பிரதான வீதி | திரு.போ.கோகுலன் | வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையம், கோப்பாய் |
| 20 | கோப்பாய் தெற்கு | திரு.வ.கிருசாந் | கலைவாணி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு |
| 21. | கோப்பாய் தெற்கு | திரு.ஜெ.சதீஸ் | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு |
| 22 | கோப்பாய் தெற்கு | திரு.சி.பிறேமிலன் | முழுமதி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு |
| 23 | உரும்பிராய் சந்தி | திரு.அ.தயாளன் | ஞானவைரவர் சனசமூக நிலையம்,உரும்பிராய் தெற்கு |
| 24. | உரும்பிராய் தெற்கு | திரு.வி.சிவபாலன் | அண்ணா சனசமூக நிலையம், உரும்பிராய் யோகபுரம் |
| 25. | உரும்பிராய் கணேசா | திரு.பா.ரூபராஜ் | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் |
| 26. | உரும்பிராய் கிழக்கு | திரு.ப.தவப்பிரியன் | செல்லப்பா சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு |
| 27. | உரும்பிராய் சிவன் கோவிலடி | திரு.யோ.ஜெகதாஸ் | யா/றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோவிலடி, உரும்பிராய் |
| 28. | உரும்பிராய் கரந்தன் | திரு.ES.சிறிதரன் | கலைவாணி சனசமூக நிலையம், உரும்பிராய் கரந்தன் |
| 29. | உரும்பிராய் வடக்கு | திரு.பா.குருபரன் | சரஸ்வதி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு |
| 30. | ஊரெழு | திரு.கு.உதயகுமார் | யா/ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு |
| 31. | ஊரெழு மேற்கு | திரு.அ.சஞ்சயன் | யா/ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு |
| 32. | ஊரெழு வடக்கு | திரு.இ.வேல்குமார் | யா/ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு |
| 33. | இருபாலை சந்தி | திரு.வ.நிதர்சன் | யா/கோப்பாய் மகாவித்தியாலயம், கோண்டாவில் வீதி, இருபாலை |
| 34. | இருபாலை கிழக்கு | திரு.க.திஸாகரன் | பாரதி சனசமூக நிலையம், இருபாலை கிழக்கு |

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
நீர்வேலி.
29.08.2025

(C3759)

செயலாளர்
(திருமதி.ரஜித்தா சிவாகரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு. துறையில் வீதிமின்விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரப்பகுதியில் புதிதாக வீதிமின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பருத்தித்துறை நகர் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பழைய வீதிமின் விளக்குகள் அகற்றப்பட்டு புதிய மின்விளக்குகள் மாற்றும் பணி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டத்தினை நேரில் பார்வையிட்டு செயற்படுத்தி வரும் நகர சபைத் தவிசாளர் வி.டக்ளஸ் போல் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பல இடங்களில் வீதி மின் விளக்குகள் பராமரிப்பின்றி பழுதடைந்த காரணத்தினால் இருளில் காணப்பட்டு வந்துள்ளதாகப் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து எமது சபையின் முதலாவது அமர்வின் போது ஒரு மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பருத்தித்துறை நகரினை ஒளியூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் நூறு புதிய மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தும் பணி தற்போது பருத்தித்துறை நகரின் மையப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதான வீதியில் காணப்படும் சகல வீதி மின் விளக்குகளும் அகற்றப்பட்டு அவற்றுக்குப் பதிலாக புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட உள்ளன. தொடர்ந்து வட்டார ரீதியாக வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணி முன்னெடுக்கப்பட உள்ளது.

தற்போது கழற்றப்படும் மின் விளக்குகள் பழுதுபார்க்கப்பட்டு நகரின் உட்புறப் பகுதிகளில் தேவையான இடங்களில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார். (8-60)

# நீதிக்கான போராட்டம்
## தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு!

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவை வழங்கும் எனவும் , போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் , அக் கட்சியின் உப செயலாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் ,

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை கோரியும் , இலங்கையில் நடைபெற்ற இனவழிப்பு போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணைகள் தேவை என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வடக்கு கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி செம்மணிப் பகுதியில் காலை 10 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது

குறித்த போராட்டத்திற்கு தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவை வழங்கும் அதேபோன்று ஏனைய தரப்புக்களும், உறவுகளின் நீதி கோரல் போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (8-33)

# சுவிஸ் பிரஜையின் பணம் திருட்டு ஒன்பது சந்தேக நபர்கள் கைது!

(கரணவாய்)

சுவிஸ் நாட்டு பிரஜையான வயோதிபரின் வீட்டில் 41 ஆயிரம் சுவிஸ் பிறாங்கை பகுதி பகுதியாகக் கொள்ளையிட்ட ஒன்பது சந்தேக நபர்களையும் எதிர்வரும் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கு, அத்தாயைச் சேர்ந்த சுவிஸ் பிரஜையான வயோதிபர் தனது 41 ஆயிரம் சுவிஸ் பிறாங்கை (இலங்கை ரூபாயில் ஒரு கோடியே 47 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்) தனது வீட்டில் வைத்திருந்துள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் பார்த்தபோது அவை காணாமல் போயிருந்தது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடிப் பொலிஸார் அவ் வீட்டில் வேலை செய்தவர் உள்ளிட்ட 9 சந்தேக நபர்களை கைது செய்ததுடன் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேற்படி சுவிஸ் பணத்தை சிறிது சிறிதாக எடுத்து ஆடம்பர செலவு செய்தமை தெரியவந்தது.

கொள்ளையிடப்பட்ட பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட தொலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் இரண்டாம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (8-60)

# நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில், மானிப்பாய் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். வி. தர்மலிங்கம் அவர்களின் 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் இடம்பெறவுள்ளது.

ஓய்வு பெற்ற தபாலதிபர் மு. சண்முகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் "தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும்" எனும் விடயத்தில் நினைவுப் பேருரையினை வழங்கவுள்ளார்.

அத்துடன் அன்னாரின் புதல்வர் த.சித்தார்த்தன் நன்றியுரையினை நிகழ்த்தவுள்ளார். காலை 10.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்றலில் அமைந்துள்ள அன்னாரின் சிலைக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் பிற்பகல் 4 மணிக்கு யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் அமைந்துள்ள சிலைக்கு மாலைகள் அணிவித்து அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளதென ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (3)

# புதிய பணிப்பாளர் சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க புதிய பணிப்பாளர் சபை தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

தலைவராக க.கோடீஸ்வரனும் உப தலைவராக சி. கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டதோடு உறுப்பினர்களாக வை. பூபதி, மு. சுப்பிரமணியம், க. வக்சலா, சி. சுஜீபன் மற்றும் பா. காஞ்ஜீவன் ஆகியோர் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்டனர். (3)

# மனைவி நல வேட்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் "மனைவி நல வேட்பு விழா" நாளை சனிக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெறாதவர்களும் தம்பதிகளாக கலந்து கொள்ள முடியும். பங்கு பெற விரும்பவோர் 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (8)

# 'மறைந்த பேனாவின் மை'



## மறைந்தார் மாண்பு

இலக்கியப் பணியாற்றி மறைந்தும் மறக்க முடியாத மாவை வரோதயன் நினைவாக பதினாறு ஆண்டுகள் கழிந்தும் பேனாவின் மை காயாத சுவடுகளைத் தொட்டு நிற்கின்றோம்.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேசத்தில் உள்ள மாவிட்டபுரம் பளை வீமன்காமத்தை சேர்ந்த சிவகடாட்சம்பிள்ளை, தேவி தம்பதியினருக்கு இரண்டாவது செல்வப் புதல்வனாகப் பிறந்தவர்தான் மாவை வரோதயரன் என்னும் புனை பெயர்கொண்ட எழுத்தாளர் சத்திய குமாரன். இவர் 1965-09-12-ஆம் திகதி இந்த மண்ணில் மலர்ந்த வாடாமல்லிகை. சிறு வயதிலிருந்தே அழகும் மண்வாசனை வீசும் குணமும், நேர்கொண்ட செயலும், பல்துறைகளில் ஈடுபாடும் கொண்ட இவரை சிறந்த ஆளுமையுடையவராக வளர்த்திருந்தது.

தனது கல்வியை யா/வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் பின் யா / காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் அதன் பின்னர் சிரேஷ்ட தராதரத்தை சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலயத்திலும் தொடர வேண்டியிருந்தது.

கற்றல் செயற்பாட்டை சிறப்பாக முடித்தபின். வேலை தேடிய நிலையில் ஆரம்பத்தில் பரீட்சைத் திணைக்களத்தில் இலிகிதராக பணி புரிந்து பின்னர் சுகாதார திணைக்களத்தில் சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றிய போதிலும் இலக்கிய வாதியாக பொதுச் சேவையில் தன்னை அர்ப்பணித்து பல படைப்புக்களை விட்டுச் சென்றுள்ளார்.

சிறு கதை, கவிதை, சிறுவர் பாடல்கள், மேடை நாடகம், விமர்சனம் என பல துறைகளில் இவர் பணி தொடர்ந்தது. சிறப்பாக தேசிய கலை இலக்கியப் பேரவையில் ஆட்சிக் குழு உறுப்பினராக சேர்ந்து கொழும்புக் கிளையின் செயலாளராக மாவை வரோதயன் இருந்த காலத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

பெரும் எண்ணிக்கையான கவிதைகளையும், சிறுவர் பாடல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் மேடை நாடக விமர்சனக்கட்டுரைகளையும் எழுதியுள்ளதோடு குறிப்பாக "வேப்பம் மரம்" சிறுகதைத் தொகுப்பும் "இன்னமும் வாழ்வேன்" என்னும் கவிதைத் தொகுப்பும், சிறுவர் கவிதைகள் "ஒற்றுமையாய் ஆடுவோம்" என்னும் நூலாகவும் வெளிவந்துள்ளது.

இவைகள் பெரும்பாலும் ஈழத்துப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது புலம்பெயர் தமிழர்களின் ஆதரவில் வெளியீடுகள் விமர்சனங்கள் ஊடாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அறிவும் ஆற்றலும் கொண்டு மிளிர்ந்த காலத்தில் எத்தனை காலம் வாழ்கிறோம் என்பதை விட என்ன விடயத்தை செய்கின்றோம் என்பதில் குறியாக இருந்து குடும்பத்தையும் பொது வாழ்வையும் சமநிலையில் பேணி வாழ்ந்து காட்டிய ஒளிவிளக்கு 29-08-2009 அன்று தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு இறையின்பம் கண்டாலும் "இன்னமும் வாழ்வேன்" என்ற கவிதைத் தொகுப்பினூடாக அவர் இன்றும் வாழ்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

இலங்கை வானொலியில் ஆரம்பித்த மாவை வரோதயனின் கலைப் பயணம் சுடச்சுட மிளிரும் பொன் போல இறந்தும் மறவாத இன்பம் தரும் தேனாக இவர் பேனாவின் மை அமைந்துள்ளது.

"இளங்கலைஞர்"
பா.இரமணாகரன் ஆசிரியர்,
யா/ மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை, துணைவி புராதன அருள்மிகு சிவன் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று

**துணைவி புராதன அருள்மிகு சிவன் ஆலயத்தின் வரலாறு**

2012ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்குத் தெற்கே சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள துணைவி கிராமத்தில், தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் போது, அதிக அளவில் சிதைந்த நிலையில் ஒரு பழைமையான ஆலயம் கண்டறியப்பட்டது.

இந்த ஆலயத்தின் மொத்த நீளம் 50 அடி, அகலம் 40 அடி. இதன் கர்ப்பகிரகம் 6 அடி நீளமும், 4.5 அடி அகலமும் கொண்டது. கருங்கற்களால் கட்டப்பட்ட கர்ப்ப கிரகத்தைத் தவிர, கோறல் கற்களால் அமைக்கப்பட்ட அந்தராளம், முன்மண்டபம், துணைக் கோயில், மற்றும் சுற்றுமதில் ஆகியவை பெருமளவில் அழிவடைந்த நிலையில் இருந்தன.

**கல்வெட்டு சாசனங்கள்**

கர்ப்பகிரகத்தின் மேற்குச் சுவரில், கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஏழு கல்வெட்டுப் பகுதிகள் காணப்பட்டன. இவை, ஆலயத்தின் முழுமையான வரலாற்றை விவரிக்கும் கல்வெட்டின் சில பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

காலப்போக்கில், இந்த ஆலயம் கைவிடப்பட்டிருந்த நிலையில், அதன் கற்கள் அருகாமையில் அமைக்கப்பட்ட புதிய ஆலயத்திற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதனால், கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்களும் எடுத்துச் செல்லப்பட்டிருக் கலாம். தற்போது எஞ்சியுள்ள கல்வெட்டுகளில், சில சொற்களும், நபர்களின் பெயர்களும் அறிய முடிகின்றன. இந்தக் கல்வெட்டுச் சாசனங்களின்படி, இந்த ஆலயம் அக்காலத்தில் **சிவன் பிரகேஸ்வரன்** என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.


**ஆலயத்தின் காலம்**

தமிழகத்தில், 10ஆம் நூற்றாண்டு முதல் சிவன் பிரகேஸ்வரன் என்ற பெயரில் பல சிவன் ஆலயங்கள் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. இருப்பினும், யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட முதலாவது கிரந்த எழுத்துச் சாசனம் இது என்பதால், இதற்குத் தனிச்சிறப்பு உண்டு.

இந்தக் கல்வெட்டுகளின் எழுத்து அமைதியை வைத்து, இந்த ஆலயம் 15ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர் புஷ்பரட்ணம் (2014) குறிப்பிட்டுள்ளார்.

**யாழ்ப்பாண மரபுரிமை மையம்**

யாழ்ப்பாண மரபுரிமை மையம், தமிழ் தொல்லியல் மற்றும் பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாப்பதையும், அவற்றை வருங்கால சந்ததியினருக்குக் கொண்டு சேர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பாகும். **பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம்** அவர்கள் இதன் தலைவராகவும், **பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ்** அவர்கள் உப தலைவராகவும் பொறுப்பேற்று இவ்வமைப்பை வழிநடத்தி வருகின்றனர்.



இந்த அமைப்பின் மூலமாகப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில், நல்லுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களின் நிதி உதவியுடன், **சங்கிலியன் தோரண வாசல்** மற்றும் **ஆனைக்கோட்டை அகழ்வாய்வு** போன்ற மிக முக்கியமான தொல்லியல் மற்றும் பாரம்பரியச் செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.


இதன் ஒரு பகுதியாக, மிகவும் பழைமையான **துணைவி சிவன் ஆலயத்தைப்** புனரமைக்க முடிவு செய்யப்பட்டது. ஆலயத்தின் வரலாற்றுப் பெருமையை அறிந்த, ஓய்வுபெற்ற கால்நடை சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் **மருத்துவர் சிவயோகநாதன்** அவர்களும், அவருடைய மகள், அமெரிக்காவின் மெற்றா நிறுவனத்தில் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளராகப் பணிபுரியும் **பாலயோகஸ்தினி** அவர்களும் இணைந்து, இந்த ஆலயப் புனரமைப்புப் பணிக்கான நிதியை வழங்க முன்வந்தனர்.

அவர்களின் நிதியுதவியைக் கொண்டு, தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு, அவர்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படி, புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், தொல்லியல் திணைக்கள அதிகாரியுமான **திரு. பா. கபிலன்** அவர்களின் மேற் பார்வையின் கீழ், **2025 ஆம் ஆண்டு மாசி மாதம் 7ஆம் திகதி** அன்று புனரமைப்புப் பணிகள் முறைப்படி தொடங்கப்பட்டன.

**புனரமைப்புப் பணிகள்**

துணைவி சிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் **2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி** அன்று தொடங்கப்பட்டன. யாழ்ப்பாண மரபுரிமை மையத் தின் தலைவர் **பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**, உப தலைவர் **பேராசிரியர் சு. ரவிராஜ்**, ஆலயப் பணிகளுக்கு நிதி வழங்கிய **மருத்துவர் சிவயோகநாதன்**, யாழ்ப்பாண மரபுரிமை மைய உறுப்பினர்கள், மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இணைந்து புனரமைப்புப் பணிகளுக்கான தொடக்க நிகழ்வுகளை நடத்தி வைத்தனர்.

இங்கு **கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், மடப்பள்ளி, களஞ்சிய அறை மற்றும் தீர்த்தக் கிணறு** ஆகியவை புனரமைக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட கருவறையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பரிவார தெய்வங்களாக அம்மன், சந்தான கோபாலர், நந்தி, ஜுரதேவர் மற்றும் வைரவர் ஆகியோரின் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.



**ஜுரதேவர் விக்கிரகத்தின் சிறப்பு**

இலங்கையின் வேறு எந்த ஆலயத்திலும் காணப்படாத வகையில், இங்கு **ஜுரதேவர்** விக்கிரகம் அமைந்திருப்பது இந்த ஆலயத்தின் மிக முக்கியமான சிறப்பம்சமாகும். நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளைப் பெறுவதற்காக ஜுரதேவரை வழிபடும் வழக்கம் இந்தியாவில் பரவலாகக் காணப்படுகிறது. அந்தக் கடவுளின் விக்கிரகம் இங்கு அமைக்கப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

**மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம்**

வட்டுக்கோட்டை துணைவி கிராமத்தில் வயலும் வயல்சார்ந்த மருதநிலப் பரப்பில் அமைந்துள்ள 400 வருடங்களுக்கு மேல் பழைமையான புராதன சிவன் ஆலயம் புனரமைக்கபட்டு நிகழும் விசுவாசு வருடம் ஆவணி மாதம் 13ஆம் நாள் இன்று வெள்ளிக்கிழமை பூர்வபக்ஷ ஷஷ்டி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.20 மணி தொடக்கம் 10.30 வரையுள்ள துலா லக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பிற்பகல் மண்டலாபிஷேகமும் நடைபெறும்.


**அனைத்து அடியவர்களும் ஆன்மிக நெறியுடன் வருகை தந்து, இறையருளைப் பெற்று உய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**ஏ.ஆர். ரமேஷ்,**
**செயலாளர்,**
**யாழ்ப்பாண மரபுரிமை மையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதுகள் இனியும் தொடரும்

# அதிரடி காட்டும் அரசாங்கம்



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று மேலும் பலரும் கைது செய்யப்படுவர் என துணை அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**


சட்டத்தின் முன் ரணில் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களைப் போல ஒரு நபர் மட்டுமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இன்னும் பலர் இந்த விதியை எதிர்கொள்வார்கள் என அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கே இந்த நிலை என்றால் நமக்கு என்ன நடக்கும் என இப்போதே பலர் சிந்தித்திருப்பார்கள்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இதே சிந்தனையுடன் இருப்பார் எனவும் அவர் கூறியுள்ளார். ( நி)

# தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் ரணில்



(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருந்து வெளியேற முடியும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதும், தொடர்ந்து சிகிச்சை பெறுவதும் அவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் முடிவைப் பொறுத்து உள்ளது.

எவ்வாறிருப்பினும் ரணில் விக்கிரமசிங்கவை வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றுவது குறித்து வைத்தியர்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார். (நி)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் நரம்பியல் புனர்வாழ்வு நிலைய 2 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (3)

## வட்டுக்கோட்டை துணைவி சிவனுக்கு மஹா கும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை துணைவி பிரகேஷ்வரன்(ஆதிசிவன்) ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.20 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள துலா லக்ன சுப முகூர்த்த வேளையில் இடம் பெறவுள்ளது. (8)

## இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகள் குறித்து ஐ.நா. கவலை

(ஜெனீவா)

மியான்மரைச் சேர்ந்த ரோஹிங்கியா அகதிகள் குழுவை இலங்கையில் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது குறித்து இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

2024 டிசம்பரில் 116 ரோஹிங்கியாக்கள் கொண்ட குழு கடல் வழியாக இலங்கைக்கு வந்து, பின்னர் முல்லைத்தீவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்களை மீட்டு மனிதாபிமான உதவிகளை வழங்கியதற்காக அரசாங்கத்தையும் இலங்கை கடற்படையையும் பாராட்டிய அவர்,

அரசாங்கத்துடனான நீண்டகால ஒப்பந்தத்தின்படி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையகத்தை அணுகவும், பதிவு செய்ய அதிகாரிகளை வலியுறுத்தினார்.

மியான்மருக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள ரோஹிங்கியா மக்கள் ஏற்கனவே உள்ள மோசமான சூழ்நிலைகள் மேலும் மோசமடைவதை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24, சப்பல் வீதி, 113, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சிந்துராஜன் கர்வாலோ கைம்பெண் சேவியர் கனகரட்ணம் கர்வாலோ என்றும், இல-113/1, றொசாரியோ ரைபூரியஸ் அமிர்தம் கர்வாலோ பெண் மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ எனவும் ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இந்துராஜன் கர்வாலோ கைம்பெண் சேவியர் கனகரட்ணம் கர்வாலோ மற்றும் றொசாரியோ ரைபூரியஸ் அமிர்தம் கர்வாலோ பெண் மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ ஆகியோர் 27.10.1976 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை முகதாவில் 245 ஆம் இலக்கத்தில் பிரிவிடல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியிருந்தனர்.

குறித்த ஆதனத்தை இல-113, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீலியன் ரமேஷ் விக்டோரியா என்பவர் மேற்படி ஆதனம் தனது பூட்டனாரான S.M.A.விக்டோரியா 1980 இல் கொள்வனவு செய்து ஆண்டனுபவித்து அவரது பிள்ளைகளும் தனது பேரன் பேத்தியுமான சேவியர் கனகரத்தினம் கர்வாலோ, சிந்துராயன் கர்வாலோ ஆகியோருக்கு நன்கொடையாக வழங்கி ஆண்டனுபவித்து வந்ததாகவும், பின்னர் இவர்களும் தனது அம்மாவின் தங்கையான மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ என்பவரும் தத்தமது பங்குகளை தனது தாயாரான றொசிட்டா விக்டோரியாவுக்கு நன்கொடை அளித்ததாகவும் குறித்த ஆதனம் இரண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்ட ஆதனங்கள் என்றும் இது தொடர்பான ஆவணங்கள் யுத்த சூழ்நிலையால் தொலைந்து விட்டதாகவும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தனது தாயின் தாயார் தனது பராமரிப்பில் இறுதிக்காலம் வரை இருந்து இறந்ததாகவும் அவர் வாய்மொழி மூலம் தனக்கே வழங்கியதுடன் தனது ஆட்சிக்குட்பட்டதும் மாதாவழி முதுசமும் எனக்கூறி 02.11.2024 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் 20130 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதன விஸ்தீரணம் தொடர்பில், ஜீலியன் ரமேஷ் விக்டோரியா அவர்கள் இவ்வாதனம் தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜாவினால் அளந்து வரையப்பட்ட 13308 ஆம் இலக்க 2023.12.03 ஆம் திகதிய நில அளவைப் படத்தில் 1 ஆம் 2 ஆம் துண்டுகளாக சுட்டப்பட்டு நிலப்பரப்பு 01 குளி 0.42 ஆக காணப்படுவதாக கூறி 14.05.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமகள் இராதாகிருஷ்ணன் முகதாவில் 625 ஆம் இலக்க தொடர்புபடுத்தி வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ் மாநகர சபை, யாழ் நகர் மேற்கு-J/73 கிராம அலுவலர் பிரிவு, கறையூர் இறை. "களிமண்குண்டு" நில.பரப்பு 01 குளி 0.42 ம் உடைந்த வீடும் கிணறும் மற்றும் அதற்குரியவைகளும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜாவினால் 2023.12.03 ஆம் திகதி 13308 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப் படத்தில் 1 ஆம் 2 ஆம் துண்டுகளாக சுட்டப்பட்டுள்ளன. இந்த நிலப்பரப்பு ஒன்றும் குளி பூச்சியம் தசம் நான்கு இரண்டு (நி.பர 01 குளி 0.42) இதற்கு எல்லைகள்-

கிழக்கு - 5 ஆம் குறுக்குத் தெரு.
வடக்கு - றோய் றெமிடியஸ் நிக்கலசினதும் மேரி எவஸ்ரா பப்சி மரியதாசனினதும் ஆதனங்கள்.
மேற்கு - மேரி எவஸ்ரா பப்சி மரியதாசனின் ஆதனம்.
தெற்கு - தேவாலய வீதி.
இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

தற்போது ஜீலியன் ரமேஷ் விக்டோரியா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஜீலியன் ரமேஷ் விக்டோரியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர் யாழ் மாநகர சபை.** (C-3756)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சீன அணிவகுப்பில் கிம், புடின் பங்கேற்பு

(பீஜிங்)
வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அடுத்த வாரம் பீஜிங்கில் நடைபெறும் இராணுவ அணிவகுப்பில் கலந்து கொள்வார் என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது அவரது முதல் சர்வதேச அளவிலான தலைவர்கள் கூட்டம் என்றும் நம்பப்படுகிறது.

"வெற்றி நாள்" என்று அழைக்கப்படும் இந்த அணிவகுப்பு, சீனாவின் ஜப்பானுக்கு எதிரான போரின் 80 ஆவது ஆண்டு நிறைவையும், இரண்டாம் உலகப் போரின் முடிவையும் குறிக்கும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் 26 நாட்டுத் தலைவர்களில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் ஒருவர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கிம்மை சந்திக்க விரும்புவதாகக் கூறிய சில நாட்களுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

சீனா நூற்றுக்கணக்கான விமானங்கள், டாங்கிகள் மற்றும் ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள் உள்ளிட்ட அதன் அணுமைய ஆயுதங்களை இதன்போது காட்சிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் இராணுவத்தின் புதிய படை அமைப்பு ஒரு அணிவகுப்பில் முழுமையாக காட்சிப்படுத்தப்படுவது இதுவே முதல் முறை.

மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இந்த அணிவகுப்பில், தியனன்மென் சதுக்கத்தின் வழியாக பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் செல்லவுள்ளனர்.



இதில் சீன இராணுவத்தின் 45 பிரிவுகளின் வீரர்களும், போர் வீரர்களும் அடங்குவர்.

நேற்று சீனாவின் வெளிவிவகார அமைச்சு நடத்திய செய்தியாளர் சந்திப்பில், பியாங்யாங்கின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றான பீஜிங், அதன் அண்டை நாட்டின் பல தசாப்த கால பாரம்பரிய நட்புறவை பாராட்டியது.

அத்துடன், இருநாடுகளும் பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை குறித்து தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கிம்மின் வருகை, 2015 இல் நடந்த சீனாவின் கடைசி வெற்றி தின அணிவகுப்பிலிருந்து ஒரு முன்னேற்றமாகும்.

இந்த அணிவகுப்பின் போது பியாங்யாங் அதன் உயர் அதிகாரிகளில் ஒருவரான சோ ரியோங் - ஹேயை பீஜிங்கிற்கு அனுப்பியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

மேற்கு ஆசிய நாடான ஈரானை, அணு ஆயுத தயாரிப்பில் இருந்து தடுக்க, 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

இதை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து தயாரித்தன.

இந்த ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டதால், அந்நாட்டின் மீதான ஐ.நாவின் பல தடைகள் நீக்கப்பட்டன.

இந்த ஒப்பந்தத்தில் இருந்து, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டொனால்ட்ட்ரம்ப், 2018இல் வெளியேறினார்.

இதையடுத்து ஈரான், யுரேனியத்தை அணு ஆயுதத்தரத்திற்கு செறிவூட்டும் பணியில் இறங்கியது. இது தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்று கூறி, ஈரான் மீது கடந்த ஜூனில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்த மோதல் 12 நாட்கள் நீடித்தது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக, அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி வளாகங்கள் மீது குண்டுகளை வீசியது.

அணுசக்தி வளாகங்கள் சேதமடைந்ததாகக் கூறி, சண்டையை நிறுத்த அமெரிக்கா அழைப்பு விடுத்தது.

அதை ஏற்று, இஸ்ரேல் மற்றும் ஈரான் மோதலை

## இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்


### பாப்பரசர் வலியுறுத்து

(வத்திக்கான்)
இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என பாப்பரசர் 14ஆம் லியோ தெரிவித்துள்ளார்.

நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டும் எனவும் பணயக் கைதிகளை விடுவித்து, உதவிகளை வழங்க வேண்டும் எனவும் இரு தரப்புக்கும் வலுவான வேண்டுகோள் விடுப்பதாக பாப்பரசர் தெரிவித்தார்.

அதிகமான அளவிற்குப் பயங்கரவாதம், அழிவு மற்றும் மரணத்தை ஏற்படுத்தியுள்ள போரானது விரைவில் நிறுத்தப்பட வேண்டும் என தாம் கேட்டுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனித பூமியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் மற்றும் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் பன்னாட்டு சமூகத்திற்கும் ஒரு வலுவான வேண்டுகோள் விடுப்பதாக அவர் தெரிவித்தார்.



மனிதாபிமான உதவிகளை மக்கள் பாதுகாப்பாக அணுகுவதை எளிதாக்க வேண்டும் என்றும், மனிதாபிமான சட்டம் முழுமையாக மதிக்கப்பட வேண்டும், என்றும் பாப்பரசர் வலியுறுத்தியுள்ளார். (நி)

## பள்ளத்தில் கவிழ்...

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்ததில், அதில் பயணித்த 26 பேர் பலியாகியதுடன் 14 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய ஆசிய நாடான ஆப்கானிஸ்தானின் காந்தஹார் நகரிலிருந்து தலைநகர் காபூல் நோக்கி சென்ற பேருந்து நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிக்கு விபத்தில் சிக்கியது.

பேருந்து அதிவேகமாக சென்றதும், சாரதி தூக்கக் கலக்கத்தில் இருந்ததும் விபத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனை

## உக்ரைனில் தாக்குதலை தீவிரப்படுத்தியது ரஷ்யா

### ட்ரோன் ஏவுகணை தாக்குதலில் குழந்தை உட்பட 4 பேர் பலி

(கீவ்)
உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 24 பேர் காயம் அடைந்தனர்.

உக்ரைன் - ரஷ்யா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் முயற்சி செய்து வருகிறார்.

அவர் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் உக்ரைன் ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் ட்ரம்பை சந்தித்து பேசினார்.

இதில் போர் நிறுத்தம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. "உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்திக்க மாட்டார்.

ஏனெனில் அவருக்கு அவரை பிடிக்கவில்லை" என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதனால் போர் தொடரும். முடிவுக்கு வராது என்பது தெளிவானது. இந்த சூழலில் உக்ரைனில் ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 24 பேர் காயம் அடைந்தனர்.

இறந்த 4 பேரில் ஒரு குழந்தையும் அடங்கும். ஒரு அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் ட்ரோன் தாக்குதலில் இடிந்து தரைமட்டமானது.

மேலும் சில இடங்களில் ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தி வருவதால் பதற்றமான சூழல் நிலவுகிறது. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக

# முரண்டு பிடிக்கும் ஈரான் எச்சரிக்கும் ஐரோப்பிய நாடுகள்!



(ஜெனீவா)

**அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக தொடர்ந்து முரண்டு பிடிக்கும் ஈரானுக்கு, ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

த்திக் கொண்டன.

ற்போது ஈரானுடன் மீண்டும் னுசக்தி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் ற்சியில் ஐரோப்பிய நாடுகளான ன்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகியவை, ராப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் னீவாவில் நேற்றுமுன்தினம் பேச்சு நடத் .

அதில், ஈரான் சர்வதேச அணுசக்தி மையின் அதிகாரிகளை தங்கள் நாட்டின் அணுசக்தி வளாகங்களுக்குள் அனுமதிக்க வேண்டும், 60 சதவீத தரத்தில் செறிவூட்டி வைத்துள்ள 400 கிலோ யுரேனியத்தை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும், அணு ஆயுதம் தயாரிக்கக் கூடாது போன்ற நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன.

ஆனால், அது எதையும் ஈரான் ஏற்கவில்லை. இதனால் பேச்சு இழுபறியில் முடிந்தது.

இதனால், மூன்று ஐரோப்பிய நாடுகளும் 2015இற்கு முன், ஐ.நா. விதித்த பொருளாதார தடைகளை மீண்டும் அமுல்படுத்தும் பணிகளை தொடங்குவோம் என எச்சரித்துள்ளன. ஈரானுடனான சர்வதேச நாடுகளின் அணுசக்தி ஒப்பந்தத்தில் "ஸ்னாப்பேக்" செயல்முறை என்ற ஒன்று உள்ளது.

இதன்படி ஈரான் ஒப்பந்தத்தை மீறியதாக, அதை உருவாக்கிய ஐந்து நாடுகளில் ஏதேனும் ஒன்று கருதினால், இந்த செயல்முறையை கொண்டுவரலாம். இது ஐ.நா வின் 2015 இற்கு முந்தைய பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்த அனுமதிக்கும்.

ஆனால், இந்த தீர்மானம், எதிர்வரும் அக்டோபர் 18 இல் காலாவதி ஆகிறது. அதற்குள் ஈரானை வழிக்கு கொண்டு வர ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் தருகின்றன. (நி)

## ...ிழ்ந்த பேருந்து!

26 பேர் உயிரிழப்பு

14 பேர் காயம்

ஆப்கானில் துயரம்



அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீபத்தில் நடந்த விபத்தில், ஈரானில் ந்து ஆப்கானிஸ்தானுக்கு திரும்பிய பெயர்ந்தோரை ஏற்றி சென்ற பேருந்து ழுத்து எரிந்ததில், 81 பேர் பலியாகியமை யிடத்தக்கது. (நி)

## அவுஸ்திரேலியா, கனடா, பிலிப்பைன்ஸ் இணைந்து தென்சீனக் கடலில் பயிற்சி



சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் தென் சீனக் கடலில், பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் கடற்படைக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் கூட்டாக இணைந்து இராணுவப் பயிற்சிகளை நடத்தியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸ் வழிநடத்தலில் நடைபெற்ற இப் பயிற்சியில், பிலிப்பைன்ஸ் கடற்படையின் வழிநடத்தும் ஏவுகணை கப்பல், அவுஸ்திரேலியாவின் ஏவுகணை தாங்கி அழிப்புக் கப்பல், கனடாவின் (படைப்பிரிவு கப்பல்) ஆகியவை பங்கேற்றன.

மேலும், போர் விமானங்களும் பங்கேற்று, விமானத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் சோதிக்கப்பட்டன.

பிலிப்பைன்ஸ் பாதுகாப்புத்துறை, "இப்பயிற்சி பிராந்தியத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் எங்கள் உறுதிமொழிக்கான சான்றாகும்" எனத் தெரிவித்துள்ளது.

சீனா இதற்கு உடனடி கருத்து வெளியிடவில்லை. எனினும், Scarborough Shoal உள்ளிட்ட கடல்சார் பகுதிகள் மீது தமக்கே உரிமை உண்டு என்று சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்டத்தில்
## காணிகளுக்கான பெறுமதி உயர்வு



(கொழும்பு)

2025ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தின் காணி களுக்கான பெறுமதி அதிகரித் துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது, இது 11.4 சதவீத அதிகரிப்பு எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், குடியிருப்புக் காணி களுக்கான பெறுமதி 14.4 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

அதேநேரம், வர்த்தகம் தொடர் பான காணிகளுக்கான பெறுமதி 11.5 சதவீதமாகவும், கைத்தொழில் துறைசார்ந்த காணிகளுக்கான பெறுமதி 8.4 சதவீதமாகவும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
2இல்செவ்
உயரம்: 6"
தகைமை/தொழில்: Swiss
எதிர்பார்ப்பு:உயர் பதவி (Swiss)
தொ.இ: B/15977

பிறப்பு:1980-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம்:5"6"
தகைமை/தொழில்-BA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15979

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி-பா- 2 3/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்:HNDA, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15980

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்: அத்தம்
12இல்செவ்
கி-பா- 24 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்-HNDA, Driver (Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15981

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்-பரணி
12இல்செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15985

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா-36 1/2
7இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc, MSc, Nurse
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15964

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்- சித்திரை
7இல்செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15965

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்- கார்த்திகை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: HNDE, Teacher
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15966

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா - 13 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்-A/L, Beautician
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15969

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:பரணி
கி-பா-57
2இல் சூரி செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - Bank(London)
எதிர்பார்ப்பு: Only UK
தொ.இ: G/15972

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 436



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புரிந்து கொள்ளுங்கள்!

"என்ன சார் வாழ்க்கை இது ஒரு நிம்மதியே இல்லை" என்றார் ஒருவர்.

ஏன் அப்படி சொல்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"வீட்டுக்குப் போனால் பிரச்சினை வெளியிலே வந்தால் பிரச்சினை எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது.

"எப்படி சார் நிம்மதியாக இருக்க முடியும் மனிதன்?" என்றார்.

இப்படித்தான் நம்மில் பல பேர் இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

ஒரு மனிதன் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருந்தால் அவன் சந்தோஷமாக இருக்கின்றதாக அர்த்தம் இல்லை என்கிறார்கள்.

கஷ்டங்களை ஜெயிக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதிலேதான் சந்தோஷமே இருக்கின்றதாம்!

உலகத்திலே பிரச்சினை இல்லாத மனிதனே கிடையாது! நம் எல்லாருக்குமே பிரச்சினை உண்டு. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பிரச்சினைகள் உண்டாவதும் உண்டு! இது ஒரு தொடர்கதை.

ஒரு பிரச்சினை உண்டாகும்போது அந்த சமயத்திலே அது சிரமமாக தெரியும். இருந்தாலும் அதுவும் நல்லதுக்குத்தான் என்பதை நன்றாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

வாழ்க்கையிலே தடைகள் வேண்டும். சோதனைகள் வேண்டும். பிரச்சினைகள் வேண்டும். இதெல்லாம் இல்லாமல் போய் விட்டால் வாழ்க்கையிலே அர்த்தமே இல்லாமே போய் விடும்! அதனாலே நாம் பிரச்சினைகளை உற்சாகமாக எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்!

ஆனால் இன்றைக்கு நாம் என்ன செய்கிறோம். பிரச்சினை என்று ஒன்று வந்துவிட்டால் அதைத் தீர்ப்பது எப்படி என்று யோசிப்பதில்லை! அதிலேயிருந்து தப்பிப்பது எப்படி என்று தான் யோசிக்கிறோம்.

ஒரு உண்மை என்ன தெரியுமா? ஒரு பிரச்சினையிலேருந்து தப்பித்துப் போவதற்கு நாம் முயற்சி செய்தால் அது நம்மைத் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்! தப்பித்துப் போவதற்கு நமக்கு எவ்வளவு சக்தி தேவைப்படுதோ, அதே அளவு சக்திதான் பிரச்சினையை ஜெயிப்பதற்கும் தேவைப்படுகிறதாம்.!

இது சும்மா விளையாட்டிற்குச் சொல்கின்ற வார்த்தை இல்லை. அதை புரிந்துகொண்டு அதைத் தீர்ப்பதற்கு நாம் முயலும் போது அது முழுதாக விலகிப் போய்விடும்!

பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பதிலே...

"புரிந்துகொள்ளுதல்" என்பது ஒரு முக்கியமான விடயம்.

பிரச்சினையை தீர்த்து வைக்க முயற்சி செய்ய நிபுணர்கள் எல்லாம் முதலிலே சொல்கின்ற வார்த்தை "அதை புரிந்துகொள்ளுதல்" என்பதுதான்.

"எந்த அளவுக்கு ஒருவன் பிரச்சினையின் எதார்த்தத்தை நேர்முகமாக சந்திக்கின்றானோ அந்த அளவுக்கு அவன் பலசாலியாக வெளிப்படுகிறான்!" என்பது அவர்கள் கருத்து!

தப்பி ஓட முயற்சி செய்பவன் வாழ்க்கையை சிக்கலாக்குகிறான். பிரச்சினையை நேரடியாக சந்தித்து அதன் மையப் பகுதியிலே நுழைந்து அதன் தன்மையை தெளிவாக புரிந்துகொள்ளும் போது நமக்கு பலமும் வந்துவிடும். அதைச் சமாளிக்கின்ற திறமையும் வந்துவிடும்.

சில சமயம் முழுத்தீர்வு கிடைக்கவில்லை என்றாலும் போது மான அளவு தீர்வு கிடைத்துவிடும். இதெல்லாம் அனுபவசாலிகள் சொல்கிறார்கள். அதனாலே இனிமே நமக்கு ஏதாவது பிரச்சினை என்று வந்துவிட்டால் பயந்துகொண்டு ஓடாமல் அதற்குள்ளேயே போய் என்ன என்று பார்ப்போம்.

ஒரு அம்மா மனோதத்துவ வைத்தியரிடம் வந்தார். "வைத்தியரே எங்கள் வீட்டிலே ஒரு முக்கியமான பிரச்சினை அதை எப்படி சரி செய்ய வேண்டும் என்று தெரியவில்லை!" என்றார்.

"உங்கள் வீட்டுக்காரரிடம் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டியது தானே!" என்றார் வைத்தியர்.

"பிரச்சினையே அவர்தான் வைத்தியரே.

அதனாலே தான் உங்களிடம் வந்து யோசனை கேட்கிறேன்!" என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச செயலாளர் கடமையேற்பு!



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலகத்திற்கு புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட தனபாலசிங்கம் அகிலன் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் கடமையேற்றார்.

இதன் போது மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்திய மூர்த்தி ஆகியோர் உடனிருந்தார்கள்.

மேலும் அன்றைய தினமே வேலணை பிரதேச செயலகத்தில் தனது கடமையினைப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# துவிச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்ட பெண் கைது!

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் துவிச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்ட காரைநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதுடன்-துவிச்சக்கரவண்டியையும் மீட்டுள்ளனர்.

சங்கத்தானைப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் துவிச்சக்கர வண்டியைத் தரித்துவிட்டுச் செல்லும் வீடொன்றிற்குச் சென்ற மேற்படி பெண் தனது மகளின் துவிச்சக்கர வண்டியை எடுத்துச் செல்வதாகப் பொய் கூறி திருட்டில் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி காட்சி அங்குள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் அது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் சந்தேக நபரான பெண்ணை கைது செய்துள்ளனர்.மேற்படி பெண் ஏற்கனவே பல இடங்களில் துவிச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (8-30)

# மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிக்குளம் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெற்று அன்று இரவு 6.30 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 260 | 300 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 200 | 140 | 150 |
| தக்காளி | 300 | 300 | 300 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 280 | 350 | 230 | 320 |
| கரட் | 300 | 450 | 500 | 400 | 400 |
| பூசணி | 100 | 100 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 300 | 350 |
| வெண்டைக்காய் | 100 | 140 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 400 | 250 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 180 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 250 | 100 | 140 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 300 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 180 | 250 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 150 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 50-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 210 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 200 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 60 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 180 |

## விதிமுறைகளை மீறிய உணவகங்களுக்கு
# எதிராக வழக்குத் தாக்கல்

(வவுனியா)

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவுப்பாதுகாப்பு விதிமுறைகளைப் பேணாது இயங்கிய ஆறு உணவுகையாளும் நிலையங்களுக்கெதிராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்டின் வழிகாட்டலில் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து அண்மையில் பூநகரி மற்றும் முழங்காவில் பகுதியில் உணவுப்பாதுகாப்பு பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட பெருமளவான உணவுப்பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டதோடு உணவுப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளும் இனங்காணப்பட்டன.

இதில் ஆறு உணவு கையாளும் நிறுவனங்களுக்கு எதிராக நேற்று முன்தினம் புதன்கிழமை இருபத்தைந்து குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன.

இவை நீதிமன்றால் குற்றமாக உறுதிப்படுத்தப்பட்டமையையடுத்து ஒருஇலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் தண்டப் பணமும் அறவிடப்பட்டது. (8-30-299)

# சிறுவர்களுக்கான விழுமிய வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் 4 வயது முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கான விழுமிய வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் 11 மணிவரை இடம்பெறவுள்ளது. (3)


# இராசிபலன்

29.08.2025,
ஆவணி 13 , வெள்ளிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 7.23 மணிவரை


சுவாதி முற்பகல் 11.48 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்-
உத்தரட்டாதி,ரேவதி.


வளவன்





சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நல்லது, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.





பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.





கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், உடல் நலன் சீராகும், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




நண்பர்களால் வளர்ச்சி கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.




வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, சயனசுகக் குறைவுகள் இடம் பெறலாம்.




தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டால் ஆர்வம் கூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




பணத்தேவைகள் பூர்த்தியாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

வலுவான காரணங்கள் வலுவான செயல்களை உருவாக்குகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 855





"இவளையே கேட்டுவிட்டால் போகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான். "ஊமையிடம் கேட்டு என்ன பயன்?" குருதேவரே! இவள் ஊமைதான் என்பது..."

"அதைத்தான் தாதிமார்களிடம் கேட்டேன். இங்கு வந்ததிலிருந்து இவள் ஒன்றும் பேசவில்லை என்றார்கள்."

"குருதேவரே! இவளை அடையாளம் கண்டு அழைத்து வருவதற்கு யாரை அனுப்பியிருந்தீர்கள்?"

"ஆகா! அந்த மூடன் ஏதாவது தவறு செய்து விட்டானா, என்ன?" "எந்த மூடன், குருதேவரே! தாங்கள் இத்தகைய காரியங்களுக்கு மூடனை அனுப்பி வைத்திருப்பீர்களா?"

"புத்திசாலியாக காணப்பட்டான் பழையாறைக்கு நான் சென்றிருந்த அன்று, வாணர் குலத்து வல்லவரையனுடன் ஒரு வாலிபன் சண்டையிட்டான் அல்லவா?"

"ஆம்! பழையாறை வைத்தியர் மகன் பினாகபாணி." "அவனேதான்! உன்னையும் வல்லவரையனையும் கரிகாலரைச் சந்திக்க அனுப்பிய பிறகு அந்த வைத்தியர் மகனைச் சிறையிலிருந்து விடுதலை செய்து அழைத்து வரப் பண்ணினேன். நம் ஒற்றர் படைக்குத் தகுந்தவன் என்று கண்டு, அவனைக் கோடிக்கரைக்கு அனுப்பினேன். முன்னம் அவன் கோடிக்கரைக்குப் போய்ப் பழக்கப்பட்டவனாம்."

"அவன் தான் இந்தப் பெண்ணை இங்கு அழைத்து வந்தானா?"

"அடையாளம் எல்லாம் சரியாகச் சொல்லி அனுப்பினேன். அவனும் திருவையாற்றில் கொண்டு வந்து சேர்த்துவிட்டுக் காரியம் வெற்றி என்று செய்தி அனுப்பியிருந்தான்"

"ஐயா! நான் தோற்றுப் போன காரியத்தில் வெற்றி அடைந்த அந்தப் புத்திசாலி ஒற்றன் இப்போது எங்கே? இந்தப் பெண்ணைக் குறித்து அவனையே கேட்டுவிடுவது நல்லதல்லவா?"

"நல்லதுதான்! ஆனால் நேற்றிரவு அவனுக்கு எதிர்பாராமல் ஒரு விபத்து நேர்ந்துவிட்டது!" "அடாடா! அவனுக்கு என்ன விபத்து, எப்படி நேர்ந்தது?"

"சிவிகையின் பின்னால் அவனும் வந்து கொண்டிருந்தான். இருட்டிய பிறகு கோட்டைக்கு வரவேண்டும் என்று நான் கட்டளையிட்டிருந்தபடியால் அந்தப் படியே அந்திமாலை நேரத்தில் திருவையாற்றிலிருந்து புறப்பட்டு, முன்னிரவு வேளையில் கோட்டையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று புயல் அடித்த செய்திதான் உனக்குத் தெரிந்திருக்குமே"

"ஆம், ஐயா! நான் கூடப் புயலுக்குப் பயந்து சாலை ஓரத்து யாத்திரை மண்டபம் ஒன்றில் சிறிது நேரம் தங்கியிருக்கும்படி நேர்ந்தது."

"கோட்டைக்குச் சற்றுத் தூரத்தில் சிவிகை வந்த போது சாலையில் பெரிய மரம் ஒன்று வேரோடு பெயர்ந்து விழுந்து விட்டது.

அதிர்ஷ்டவசமாகப் பல்லக்கின் மீது விழாமல் பின்னால் வந்தவர்கள் மீது விழுந்தது. வைத்தியர் மகன் பினாகபாணி விழுந்த மரத்தடியில் அகப்பட்டுக் கொண்டான்.."

(தொடரும்...)

---

# சிறுவர் அரங்கம்

## ராமுவின் துப்பறியும் மூளை



உக்கடம் பெரிய கடைவீதியில் உள்ள, கணபதி ஆயில் ஸ்டோர் எண்ணெய் கடையில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்த சாமியப்பண்ணன் உடல் நிலை சரியில்லாமல் ஒரு மாதம் விடுமுறை எடுத்து விட்டார். கணபதி ஆயில் ஸ்டோரில் மேலும் ஒரு பணியாளர் உண்டு, அவருடன் முதலாளி கணபதியப்பனும் இருப்பதால் இந்த ஒரு மாதம் சமாளித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து விட்டார்கள்.

ஆனால் கூட்டம் அலை மோத கணபதியப்பனுக்கு பாக ஒரு ஆள் தேவை என்று ஆகிவிட்டது. தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்தார் கணபதியப்பன்.

அடுத்த நாள் ஒருவர் வந்து கடையில் வேலை கேட்டார். இதற்கு முன்னால் ஒரு "ஆயில் கடையில்" வேலை பார்த்ததாகவும், சம்பளம் கட்டுபடியாகாமல் இங்கு வருவதாகவும் சொல்ல மேற்கொண்டு விசாரிக்காமல் நாளை வேலைக்கு வர சொல்லி விட்டார்கள்.

மறு நாள் வந்தவர் கையோடு நல்ல வளுத்த துணிகள் பத்து [illegible] கொண்டு வந்திருந்தார். அதனைக் கொண்டு முதலில் எண்ணெய் பிசுக்குகளை சுத்தமாக துடைக்க ஆரம்பித்தார். எண்ணெய் வாங்க ஆட்கள் வரும் போது, அவர்களுக்கு எண்ணெய் ஊற்றி விட்டு மற்ற நேரங்களில் சுற்றி உள்ள ஆயில் டின்களில் உள்ள எண்ணெய் பிசுக்குகளை துடைத்ததால் அந்த இடம் "பளிச்" என்று ஆனது. இப்பொழுது எண்ணெய் கடையா? என்று கேட்கும் அளவுக்கு கடை இருக்கவும் கணபதியப்பனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஆகி விட்டது.

ஒரு வாரம் ஓடியது வழக்கமாக விற்றது போக கடையில் மிச்சமுள்ள எண்ணெய் வழக்கமான அளவை விட குறைவாக இருந்தது. கணபதியப்பன் தலையைப் பிய்த்துக் கொண்டார். கண் முன்னால் தான் எண்ணெய் ஊற்றுகிறார்கள், இவர் கண்கொத்தி பாம்பாய் பார்த்து கொண்டிருக்கிறார், அப்படியும் எண்ணெய் குறைய என்ன காரணம் என்று புரியவில்லை. புதிதாக வந்த ஆளும் ஒழுங்காக எண்ணெய் ஊற்றுகிறார். இடைப்பட்ட நேரங்களில் வழியும் எண்ணெய் பிசுக்குகளை துடைத்து, அதனை ஒரு பாலித்தீன் கவரில் வைத்து கட்டி வெளியே கொண்டு போய் வைத்து விடுகிறார். தினமும் குப்பை பொறுக்கும் ஒரு அம்மாள் அதனை எடுத்து சென்று விடுகிறது. முன்னைக்கு கடை இப்பொழுது சுத்தமாக இருக்கிறது. எல்லாம் சரி எண்ணெய் மட்டும் அடிக்கடி குறைந்து போகிறதே? அது எப்படி என்று மண்டையை பிய்த்துக் கொள்கிறார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய இரண்டு இடங்கள் நம் மனம் மற்றும் உள்ளம்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாண்டவர்களுக்கு சகுனி தமிழர்களுக்கு எரிக் சொல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு பிணை மறுக்கப்பட்ட பின்னர், குறித்த சில அரசியல்வாதிகள் முன்வைத்த கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான கருத்துக்கள் மூலம் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு என்பதை இனங் காண முடிந்தது.

பரவாயில்லை. ரணில் விக்கிரமசிங்க வைத் தொழுது சீவியம் நடத்தியவர்கள் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க முற்பட்டிருப்பர்.

எனினும் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதாக இருந்தாலும் அதற்குள்ளும் நீதி, நியாயம் இருத்தல் அவசியம்.

ஆம், நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை விமர்சிக்கின்ற அளவுக்கு நிலைமை செல்லுமாயின், அது பாரதூரமானதாக அமையும் என்பது தெரிந்த விடயம்.

இருந்தும் குறித்த அரசியல்வாதிகள் சிலர் ஊழல் மோசடிகளுக்குத் துணைபோவது மட்டுமன்றி, சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் நீதிமன்ற அவமதிப்பையும் செய்கின்றனர்.

இத்தகையவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நீதிபரிபாலனத்தின் செயற்பாடுகள் கேள்விக்குரியதாகிவிடும்.

இஃது ஒருபுறமிருக்க, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிணை வழங்க வேண்டும் என முதலில் குரல் கொடுத்த வெளிநாட்டவர் எரிக் சொல்ஹெய்ம் என்பது அனைவரும் அறிந்ததே.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது விசேட தூதுவராகச் செயற்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம்.

அவரின் தூது நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால் எரிக் சொல்ஹெய்ம் **தூது** எனும் மிகப்பெரும் அறப் பணியை எந்தளவு தூரம் நெஞ்சுக்கு நீதியாக ஆற்றினார் என்பது ஐயத்துக்குரியது.

ஆம், எரிக் சொல்ஹெய்மின் தூது தமிழீழ விடுதலைப் புலிகளை இறுதி நிலைக்கு ஆளாக்கியது.

தவிர, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்தின்போது அங்கு அகப்பட்டிருந்த தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவேயில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியை இழந்து ரணில் ஜனாதிபதியாகியபோது, எரிக் சொல்ஹெய்மை ரணில் தனது ஆலோசகராக நியமித்தார்.

இரு தரப்புக்கிடையில் தூதுவராகச் செயற்பட்ட எரிக் சொல் ஒருபோதும் ரணிலின் ஆலோசகர் பதவியை ஏற்றிருக்கக் கூடாது என அப்போது இதே இடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இப்போது அதே எரிக் சொல்ஹெய்ம் ரணிலுக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கேட்கிறார் எனில், புலிகளின் இறுதிக்கு மூல காரணம் யார் என்பதை இப்போதாவது நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ஆக பாண்டவர்களுக்கு ஒரு சகுனி என்றால், தமிழர்களுக்கு ஒரு எரிக் சொல்ஹெய்ம் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை.**

# புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்கும் பணி நிறைவுக்கட்டத்தில்

## நிபுணர் குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வரைவதற்காக அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பணிகள் செப்ரெம்பரில் நிறைவடையும் எனக் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது குறித்து நீதி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் வரைவு மசோதாவில் செய்யப்பட்ட திருத்தங்கள் தற்போது இரண்டாவது முறையாக ஆய்வு செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்து செய்வதற்கான, புதிய சட்டத்தை வரைவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஒரு நிபுணர் குழுவை நியமித்தார்.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் நவீன உலகளாவியப் பயங்கரவாதச் சவால்களை நிவர்த்தி செய்வதையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனி நபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு இணங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு மீண்டும் தவணையிடப்பட்டது

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று (28) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த புதைகுழியில் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் தொடர்பில் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கான விளம்பரங்கள் ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி பத்திரிகையில் காணாமல் போனோர் அலுவலகத்தால் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இது தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை எனக் காணாமல் போனோர் அலுவலகத்தால் கோரப்பட்டிருந்தது. அதனைப் பரசீலித்த மன்று, வழக்கு மீண்டும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணி எஸ்.நிறஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போது, காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் ஓகஸ்ட் மாதம் 3 ஆம்திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மனிதப் புதைகுழியில் எடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தகட்டு இலக்கங்களோடு சம்பந்தப்பட்ட இலக்கங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இவர்களுடைய உறவினர்கள் அல்லது அது தொடர்பில் தெரிந்தவர்கள் அது சம்பந்தமாக நீதிமன்றுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அது தொடர்பான அறிக்கை இன்று (நேற்று) தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அவர்களுடைய உறவினர்கள் நீதிமன்றுக்கோ அல்லது காணாமல் போனோர் சட்டத்தரணிக்கோ அறிவிக்கும் பட்சத்தில் இந்த வழக்கை நாங்கள் எந்தக் காலப்பகுதிக்குள் நடந்தது. குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டு பிடிக்க இலகுவாக இருக்கும் என்றார். (ம-7)

## யாழ்.பல்கலையில் இன்று குறுந்திரைப்படத் திருவிழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் திரையிடப்படவுள்ளன.

அதன் பிரகாரம் போர்ச்சூழலில் தனது மகனைப் பாதுகாக்கப் போராடும் ஒரு தந்தையின் பாசப்போராட்டத்தைத் தாங்கிநிற்கும் **'நான்காம் போர்'**,

நாட்டின் நிலைமை காரணமாகப் பல ஆண்டுகளாகத் தனது மகளைக் காணாமலிருந்த தந்தையின் பரிதவிப்பை வெளிப்படுத்தும் **'அன்பின் நிழல்'**,

அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை மையப்படுத்திய **'லிசா'**,

கணவன் இன்றி தன் மகளோடு வாழும் பெண் எவ்வாறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகிறாள் என்பதைச் சொல்லும் **'கம்பளிப் பூச்சி'**,

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மதகுரு ஒருவர் பற்றிய உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இன நல்லிணக்கத்தை எடுத்துக் கூறும் நோக்கில் தயாரிக்கப்பட்ட **'ஆஸ் ஏ தேர்ட் பேர்சன்'**,

தாயின் கனவைச் சொல்லும் **'சப்பாத்து'**,

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்குத் தாய் அனுபவிக்கும் வலிகளையும் வேதனைகளையும் கூறும் **'அந்தக் கணம்'**,

மலையகத்தில் ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் **'வேட்கை'**,

காணாமல் ஆக்கப்பட்ட போராளி ஒருவரது குடும்பம் எதிர்கொள்ளும் அவலங்களின் கதையான **'கணையாழி'**,

மனிதர்களின் வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படும் வேளையில் வெவ்வேறு தேவைகளையுடைய இருவர் ஒன்றாகச் சந்தித்துக்கொள்ளும் கதையான **'டிப்ரன்ட்'** ஆகிய குறுந்திரைப்படங்கள் இதன்போது திரையிடப்படவுள்ளன. (ம-7,33)

## தெல்லியூர் துர்க்காதேவி இன்று தங்கரதமேறுகிறார்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தங்கரதப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் விஷேட வசந்த மண்டபப்பூஜைகளைத் தொடர்ந்து மாலை 5.30 மணியளவில் துர்க்கா தேவித் தாயார் அழகிய தங்கரதம் தனில் ஆரோகணித்து பக்தர்களுக்கு இன்னருள் பாலிக்கவுள்ளார். (ம-7)

## பனை மீன் நாடன்பக்கம் நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும் நூல் விமர்சகருமான குருநகரைச் சேர்ந்த அ.யேசுராசா எழுதிய, 'பனை மீன் நாடன்பக்கம்' என்ற கலை இலக்கியப் 'பத்தி' எழுத்துக்களின் தொகுப்பு நூலின் அறிமுக விழா நாளை(30) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, 18/2, அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் வடகோவை வரதராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் அறிமுக உரையை ஆசிரியரும் விமர்சகருமான சி.ரமேஸ் அவர்களும் விமர்சன உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் தி.செல்வமனோகரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 47

சொக்கன்

இவர்கள் எதேச்சையாக உதிர்க்கிற முத்துக்களையெல்லாம் ஷூலா கவனமாகத் திரட்டி யூதர்களுக்கு அனுப்பிவைத்தாள்.


இரண்டு வருடம் கழித்து மொசாட் தொடங்கப்பட்டது ஆரம்பகாலத்திலிருந்தே ஷூலாவின் ரிப்போர்ட்கள் அவர்களுக்குப் பெரிய உதவியாக இருந்தன.

ஷூலா ரகசியத் தகவல்களைத் திரட்டுவதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. லெபனானில் உள்ள யூதர்களுக்காக ஹீப்ரு மொழி வகுப்புகள் நடத்தினார். அவரே பாடப் புத்தகங்களை அச்சிட்டு வழங்கினார். பல இளைஞர் அமைப்புக்களைத் தொடங்கி வழிநடத்தினார். சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் வாழ்ந்த பல நூறு யூதர்கள் லெபனான்வழியே இஸ்ரேலுக்குச் சென்று குடியேறுவதற்கு உதவி செய்தார்.

இப்படி ஒரு வருடம் இரண்டு வருடம் இல்லை. முழுசாகப் பதினான்கு ஆண்டுகளுக்கு லெபனானில் தனக்கென்று ஒரு குட்டி உளவு நெட்வேர்க்கே நடத்திக்கொண்டிருந்தார் ஷூலா. இதனால் அவர் பெரிதாக எதையும் சம்பாதித்து விடவில்லை. தன் மக்களுக்கு உதவுகிறோம் என்கிற திருப்தி மட்டும் தான்.

கடைசியாக 1961 ஆம் வருடம் ஷூலா பிடிபட்டார். லெபனான் அரசாங்கம் உளவாடல், கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்களுக்காக அவரைக் கடுங்காவல் சிறையில் தள்ளியது.

யூதர்களிடம் ஒரு நல்ல குணம் தங்களுக்கு உதவி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அத்தனை சுலபத்தில் மறக்க மாட்டார்கள். இப்போது இல்லாவிட்டாலும் பிறகு எப்போதாவது சந்தர்ப்பம் அமையும்போது அந்த உதவியைக் குறிப்பிட்டுப் பாராட்டி கௌரவப்படுத்துவார்கள்.




அந்தவிதத்தில் இஸ்ரேலுக்கு ஷூலா செய்திருக்கும் பங்களிப்பை யூதர்கள் மறந்துவிடவில்லை. மொசாட்டும், இஸ்ரேல் அரசாங்கமும் ஷூலாவை விடுவிப்பதற்குப் பல நேரடி மறைமுக முயற்சிகளில் இறங்கினார்கள். பலன் இல்லை.

கடைசியாக 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆறுநாள் போரைத் தொடர்ந்து பல போர்க் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களோடு சேர்ந்து ஷூலாவையும் விடுதலை செய்து இஸ்ரேலுக்குள் சேர்த்துக்கொண்டது மொசாட்.

ஆறு வருடச் சிறைவாசத்துக்குப்பிறகு ஜெருசலேம் திரும்பிய ஷூலாவுக்கு பிரமாதமான வரவேற்பு எல்லாத் தரப்பிலிருந்தும் அவருக்குப் பரிசுகள் பாராட்டுக்கள் விருதுகள் குவிந்தன. அவர் விரும்பியபடி இஸ்ரேல் அரசாங்கம் ஷூலாவுக்கு ஓர் அமைதியான தொழில் வாழ்க்கையை அமைத்துக்கொடுத்தது.

ஷூலாவைப்போல மொசாட்டில் சேர்ந்து சம்பளம்வாங்காத ஆனால் இஸ்ரேலின் உளவாளிகளாகப் பெரும் பங்காற்றியிருக்கும் சைலன்ட் ஏஜென்ட்கள் நிறையப் பேர் இந்தச் சாதாரண மனிதர்களுடைய உதவி இல்லாவிட்டால் மொசாட் என்கிற அமைப்பு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கமுடியாது!

## அணு, ஆயுதம், ஆப்பு!

1952 ஆம் வருடம் இஸ்ரேலின் முதல் அதிபர் சய்ம் விய்ஜ்மன் மரணமடைந்தார்.

அடுத்த அதிபராக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசித்தபோது பொரும்பாலானோர் சிபாரிசு செய்த பெயர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

E-MC² புகழ் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்தான். அன்றைய திகதிக்கு விஞ்ஞானிகள் மத்தியில்மட்டுமின்றி உலகம்முழுக்க ஐன்ஸ்டீன் புகழ் பெற்றிருந்தார். அப்படிப்பட்ட ஒரு பிரபலமான யூதர் இஸ்ரேலின் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டால் நன்றாக இருக்குமே என்று பலர் யோசித்தார்கள்.

ஆனால் இந்த விடயம் ஐன்ஸ்டீனுக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர் உடனடியாக மறுத்துவிட்டார் நீங்கள் எனக்கு இப்படி ஒரு முக்கியமான பொறுப்பைக் கொடுக்க நினைக்கிறது ரொம்பப் பெருமையா இருக்கு ஆனா என்னால இதைத் திருப்திகரமாக நிறைவேற்றமுடியும் என்னு தோன்றவில்லை ஸாரி!

ஐன்ஸ்டீன் உலக அமைதிக்காகக் குரல் எழுப்பிக்கொண்டிருந்த நேரம் அது. அவருடைய கண்டுபிடிப்புகள் மற்ற அறிவியல் முன்னேற்றங்களை வைத்துக்கொண்டு அணுகுண்டுமாதிரியான பேரழிவு ஆயுதங்களை உருவாக்குவது தவறு என்கிற கருத்தை அவர் உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆனால் அவர் சொன்னதை யார் கேட்டார்கள்? பெரிய நாடுகள் எல்லாமே பாதுகாப்புக் காரணங்களைச் சொல்லிக்கொண்டு ரகசியமாகவோ பகிரங்கமாகவோ அணு ஆயுதங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தன. இதன் பின் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்று ஐன்ஸ்டீன் உள்ளிட்ட அறிவியலாளர்கள் சமூக அக்கறை கொண்டவர்கள் எவ்வளவுதான் எச்சரித்தாலும் பிரயோஜனம் இல்லை.

ஐன்ஸ்டீன் இறந்து சில வருடங்களுக்குள் இஸ்ரேலும் அணு ஆராய்ச்சியில் இறங்கிவிட்டார்கள். இதற்காக டிமோனோ என்ற இடத்தில் அவர்கள் ஓர் ஆராய்ச்சி நிலையம் கட்டியது, மொசாட் உதவியுடன் கஷ்டப்பட்டு மஞ்சள்கேக் தேற்றியதையெல்லாம் ஏற்கெனவே விரிவாகப் பார்த்திருக்கிறோம்.

டிமோனோ அணு ஆராய்ச்சி நிலையத்தைப் பற்றிய தகவல்கள் வெளியே கசியத் தொடங்கியவுடன் அமெரிக்கா தொடங்கி எல்லா நாடுகளும் இஸ்ரேலைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தார்கள். என்னய்யா? அணுகுண்டு தயாரிக்கிறீங்களாமே? இதெல்லாம் நல்லதுக்கில்லை!

இப்படி மிரட்டியவர்களை இஸ்ரேல் கண்டுகொள்ளவில்லை. எப்போதும்போல் டிமோனாவில் அணுசக்தி தொடர்பான பரிசோதனைகள் நடந்து கொண்டிருந்தன. அதன்மூலம் என்ன தயாரிக்கிறார்கள் என்பதை மட்டும் பரமரகசியமாக வைத்திருந்தார்கள்.

ஊர்மு முக்க வதந்திகள் தூள் பறந்தன. இஸ்ரேல் அணுகுண்டு தயாரித்து விட்டார்கள். டிமோனோ கட்டடத்தினுள் வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறார்கள் சக்தி வாய்ந்த அணு குண்டுகளை மஞ்சப் பையில் சுற்றி ஊர் ஊராகக் கொண்டு செல்கிறார்கள் இஸ்ரேல் பிரதமர் ஒரு ஸ்விட்சைத் தட்டினால் போச்சு உலகம்முழுக்க யூதர்களின் எதிரிகளெல்லாம் காலி!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெண்...

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 10 மணிக்கு கொடியேற்றம் இடம் பெறும். (ந)

## 126 ஜோடி...

வைக்கப்பட்டது.

மேலும் ஆலயத்தில் 15 ஜோடிகளுக்குத் திருமணம் நடைபெற்றது.

இந்த 111 தம்பதியினரும் யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு தாலி, கூறைச் சேலை மற்றும் திருமணத்துக்கான இதரச் செலவுகளும் வழங்கப்பட்டன.(ம-7,33)

## ஆசிரியர்...

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமான உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நான்கு வழக்குகளின் நீதித்துறை நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும், நீதித்துறை நடவடிக்கைகள் முடிந்தவுடன் உடனடியாக வர்த்தமானி வெளியிடப்படும் என்றும், பட்டதாரிகள், ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

மேலும் ஏற்கனவே அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளபடி, தேவைக்கேற்ப ஏனைய பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை திருத்துவதற்கும் வயது வரம்பை நீட்டிப்பதற்கும் தற்போதுள்ள அனைத்து ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கும் இதன்போது இணக்கம் ஏற்பட்டுள்ளது. (ம-7)

## உண்மையைத்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடரின் 3 ஆவது பக்க நிகழ்வாக "அபிவிருத்திக்கான உரிமை உள்ளடங்கலாக சகல மனித உரிமைகள், சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நடவடிக்கைக்குழுவினால் வலிந்து காணாமலாக்கப்படல்கள் விவகாரத்தின் உலகளாவிய நிலைவரம் குறித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை உள்ளடங்கலாக உலக நாடுகள் பலவற்றில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் விவகாரத்தின் மோசமான நிலைவரம் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும் கரிசனைகளை வெளிப்படுத்தியும் தமக்குக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பாதாளக் குழு...

என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்வது தொடர்பாக நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் குழு கைது செய்யப்பட்டதாகவும் இது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இந்தோனேசிய பொலிஸார் நடத்திய 7 நாள் கூட்டு நடவடிக்கையின் விளைவாகும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கைக்கு இந்தியப் புலனாய்வு அமைப்புகள் ஆதரவு அளித்துள்ளதுடன் அதற்கேற்ப திட்டம் செயற்படுத்தப்பட்டதாகவும் முடங்கிப் போயிருந்த புலனாய்வு அமைப்பின் சில பகுதிகள் இப்போது செயற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

பல சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் வளர்ந்துள்ளதாகவும் தங்களின் இருப்பு மற்றும் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் வளர்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு அரசாங்கம் என்ற வகையில் அவை அனைத்தையும் நிறுத்தியுள்ளதாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை உருவாக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் உறவுகள் குறித்து தற்போது உன்னிப்பாக விசாரித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்தகைய நபர்களின் சொத்துக்கள் குறித்து தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல் தொடர்புகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், விரைவில் அது குறித்து அறிவிப்பதாகவும் கூறினார். (ம-7)

## 8 மனித...

8 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 164 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு, 177 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் (ம-7,33)

## செம்மணிப் புதை...

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் குறித்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவத்தின் கண்காணிப்பில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7)

## தனிமையில்...

நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கோபாலன் குண்டுமணி (வயது-84) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனிமையில் வசித்த பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)


மஹஜன சம்பத — திகதி 2025.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 5935 — S 9 0 0 0 8 8
அத சம்பத — S 0 0 8 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0510

சுப தவசக் — திகதி 2025.08.28 — 0651 — தனுசு 03 12 15 46

தன நிதானய — திகதி - 2025.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 1965 — G 09 17 53 72 G — Double Chance 28238

மெகா பவர் — திகதி 28/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2283 — O 14 02 68 76 77

ஜய — திகதி 2025.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0203 — J 1 6 7 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4177 — சீட்டிழுப்பு திகதி 28.08.2025 — D 10 66 69 79 — D

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 1244 — சிம்மம் 16 28 37 46 சிம்மம் — 39210

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 28.08.2025 — வெற்றி வாரம் 0643 — U 9 2 3 3 1 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,002,851.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2909 — சீட்டிழுப்பு திகதி 2025.08.28 — தினம் வியாழக்கிழமை — 01 23 64 67 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,424,655.20

சனிதா — திகதி 28.08.2025 — வெற்றி வாரம் 5070 — 04 50 70 71 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,267,786.40 — ரூ. 50,000/-

சசிரி — வெற்றி வாரம் 0757 — சீட்டிழுப்பு திகதி 28.08.2025 — வியாழக்கிழமை — 22 47 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00


ராசி — சீட்டிழுப்பு வாரம் 4621 — சீட்டிழுப்பு திகதி 28.08.2025 — தினம் வியாழக்கிழமை — 02 17 22 34 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,008,297.60

லக்பதி — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — J 19 44 46 53 61 — 2085 — 28.08.2025 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.590,585,482.60

அட கோட்டிபதி — ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2735 — சீட்டிழுப்பு திகதி 2025.08.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,785,466.40 — 29 33 38 45 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பு மலர்- 2025



### மகா கும்பாபிஷேகப் பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச் செய்தி



கோண்டாவில் பதியில் வீற்றிருக்கும் அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றுப் பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் பாலாலயம் கடந்த வருடம் செய்யப்பட்டு இந்த வருடம் ஆவணி விநாயகர் சதுர்த்தி நாளில் விம்பஸ் தாபனம் செய்யப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

மகா கும்பாபிஷேகம் இடம்பெற்ற பின்னர் கருங்கல்லில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அபிஷேகங்கள் மற்றும் கிரியை வழிபாடுகள் நிகழ்த்தி வருகின்ற போது இறைவனின் சக்திகள் நிறைந்து காணப்படும். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பிஷேக வழிபாடுகளை நாங்கள் ஆற்றாது விட்டால் இறைவன் வீற்றிருக்கும் இருப்பிடத்தின் இயந்திர சக்திகள் படிப்படியாகக் குறைந்து விருட்சத்துக்குச் செல்லும் நிலை உருவாகும். பின்னர் அடுத்த ஆண்டு அந்த விருட்சம் பட்டுத் தங்கள் இருப்பிடங்களான விண்ணுக்கே இறை சக்திகள் சென்றுவிடும். இதனால் தான் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஆலயங்களில் மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன.

வேண்டுவார் வேண்டும் வரங்களை வழங்கும் எல்லாம் வல்ல அற்புதநர்த்தன விநாயகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசிகள் கூறுகின்றேன்.

**- சிவஸ்ரீ. இராம.ஸ்ரீரங்கநாத சிவாச்சாரியார் (வரணி குடமியன் ஆதிசிவன் ஆலயப் பிரதமகுரு)**

### ஆலயத் தலைவரின் உள்ளத்திலிருந்து.....



எங்கள் தந்தையார் க.வே.சரவணமுத்து கோண்டாவில் பகுதியில் பல்வேறு சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயம், கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகராக காலம் சென்ற எங்கள் தந்தையார் விளங்குகின்றார்.

அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக எங்கள் மூதாதையரின் பெயரில் கணபதியார் மடம் 1880 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த மடம் ஆலயம் உருவாக்கப்பட்ட காலப் பகுதியான 1965 ஆம் ஆண்டு வரை இருந்தது. இவ் ஆலய வளாகத்தில் ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகளின் சமாதி காணப்படுவது ஒட்டுமொத்த கோண்டாவில் கிராமத்திற்கே மகிமையும், சிறப்பும் சேர்க்கும் விடயம் என்றால் அது மிகையில்லை.

**- திரு. சரவணமுத்து ஸ்ரீகணேசன் (ஆலயத் தலைவர்)**

### ஆலயப் பிரதம குருவின் ஆசிச் செய்தி



கோண்டாவில் பதியில் உறைந்து அருளாட்சி புரிந்து வரும் ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகருக்கு இன்று வெள்ளிக்கிழமை (29.08.2025) மகா கும்பாபிஷேகம் எனும் பெரும்சாந்தி விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

எம் பெருமானின் அற்புதங்கள் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. இவ் விழாவைச் சிறப்பாக நடாத்துவதற்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களையும் எம்பெருமான் தனது அருட்கடாட்சம் மூலம் காப்பாற்றுவாராக.

"பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்று நற்றமிழ்வல்ல திருஞானசம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். எத்தனையோ கோடி புண்ணியங்கள் மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசிப்பவர்களுக்குக் கிடைக்கும். எனவே, கும்பாபிஷேக விழா அனைத்து அடியவர்களும் கண்டு இன்புற்றிருக்க வேண்டுகின்றேன்.

எமது ஆலயத்தில் கந்தையா சுவாமியின் சமாதி இருப்பது பெருமைக்குரியது. அவரின் ஆசியுடன் இவ் ஆலய மகா கும்பாபிஷேகம் எல்லாச் சிறப்புக்களுடனும் நடைபெற வேண்டுமென எல்லாம் வல்ல அற்புதநர்த்தன விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

**- சிவஸ்ரீ.சிவ.கதிர்காமநாத சிவாச்சாரியார் (ஆலயப் பிரதமகுரு)**

### பல்வேறு சமய- சமூகப் பணிகளை ஆற்றி வரும் கோண்டாவில் அற்புதநர்த்தன விநாயகர் ஆலயம்



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயம் கோண்டாவில் கிராமத்தில் பழமை வாய்ந்ததொரு ஆலயமாகும். இவ் ஆலயம் சைவநெறிக் காவலர் க.வே.சரவணமுத்துவால் (ஆசைப் பிள்ளை) உருவாக்கப்பட்டது.

பல்வேறு சமய- சமூகப் பணிகளை எமது ஆலயம் ஆற்றி வருகிறது. ஆலயத்தின் பிரதம குருவாக கதிர்காமநாத சிவாச்சாரியார் மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு நித்திய பூசை வழிபாடுகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றார். இவ் ஆலயத்தில் முன்னர் அலங்கார உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பத்து நாட்களைக் கொண்ட மஹோற்சவம் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

எமது ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டுகின்றோம்.

**- திரு. குமாரசிங்கம் இந்திரகுமார் (ஆலயப் பொருளாளர்)**

மகா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கான முழுமையான நிதி அனுசரணை:- ஆலய பரிபாலன சபையினர்
மலராக்கம்:- செல்வநாயகம் ரவிசாந் (ஊடகவியலாளர்)

(C-3757)

# விபத்து; ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

கல்முனை-மட்டக்களப்பு பிரதான வீதியின் மருதமுனையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று வியாழக்கிழமை (28) காலை மருதமுனை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் கடமை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த கல்முனை மாநகர சபை காவலாளி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிகின்றன. (ம-7)


## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Clerk | : 0755489898 |
| நிகழ்ச்சி தயாரிப்பாளர் | : 0773322527 |
| Bill Clerk | : 0777738715 |
| Heavy Vehicle Driver | : 0771202733 |
| Accountant | : 0776696385 |
| Office Incharge | : 0741166057 |
| சமையலாளர் | : 0770085277 |
| Administration | : 0778738834 |
| Customer Care | : 0755489898 |
| Social media Presenter | : 0778738834 |
| ARSM | : 0741166057 |
| Decoration Helper | : 0777750318 |
| Waiter/Kitchen Helper | : 0766587149 |
| பராமரிப்பாளர் | : 0770085277 |
| Assistant Sales Manager (Basic 60,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு:
dewmasweb.com
வேலையாட்கள் தேவையா? :
0777733368
DEWMAS, 51, Amman Road, Nallur
(5169)

IELTS 30.08.2025 - 4.00 Pm
New Batch ஆரம்பம்
(Academic - General and Life Skill A1)
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
By: B.Murali -
077 798 9830
(5156)

வெளிநாட்டில் (UK) இல் வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை
1984, 1986, 1988(Divorce), 1990, 1992(02), 1993, 1993 (Divorce), 1996 (Divorce), 2001 ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை.
077 041 3462, 077 408 8241
(C-3761)

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com
(C-3760)

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3760)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

வேலைவாய்ப்பு
நெல்லியடியில் அமைந்துள்ள புடவைக் கடைக்கு விற்பனை உதவியாளர் (ஆண்/பெண்) முழு நேர/ பகுதி நேரப் பணியாளர்கள் தேவை.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
077 312 8378
(1495)

கனகலிங்கம் திலகவதி முகவருக்கு லொத்தர் விற்பனையாளர்கள் தேவை
தேசிய லொத்தர் சபையின், அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்களான மகாஜன சம்பத்த, ராசி அதிஸ்டம், உடனடி அதிஸ்டம் போன்ற லொத்தர்கள் விற்பனை செய்வதற்கும் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் அல்லது லொத்தர் கூடுகளில் லொத்தர்கள் விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.
◆ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
◆விசேட தேவையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு 077 6031 723
(5171)

காணி வாடகைக்கு தேவை
பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் வியாபாரம் செய்வதற்கு வெறும் காணி தேவை.
075 655 1843
(5166)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.